சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 10.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 16/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | ஆனந்தன் |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி |
| கிராமம் | : | கோவிந்தகுடி |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | துணை வட்டாட்சியர்,<br>குடவாசல் |
| வயது | : | 49 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 6 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது குடவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ஆம் வருடம் வலங்கைமான வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். அப்போது நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் செல்வராஜ் மகன் 1ம் எதிரி சூரியா (எ) சூரியராஜ், செல்வராஜ் மகன் 2ம் எதிரி கவியரசன், செல்லதுரை மகன் 3ம் எதிரி அபினேஷ், ரத்தினவேல் மகன் 4ம் எதிரி செல்வராஜ்,

செல்வராஜ் மகன் 5ம் எதிரி மாதவராஜ், செல்வராஜ் மகன் 6ம் எதிரி பப்பி (எ) நீலமேகராஜ் ஆகியோர்கள் இந்து கள்ளர் என்று சாதி சான்றிதழ் வழங்கினேன். இந்த சாதி சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ-8 முதல் 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார் விவரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அ.சா.ஆ-8 முதல் அ.சா.ஆ-13 வரை உள்ள சாதி சான்றிதழ்கள் எப்போது விசாரணை செய்தார்கள் என்ற விவரத்தினை நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நன்னிலம் துணை காவல் கண்காணிப்பாளர் எந்த தேதியில் எனக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என்று சொன்னால் எனக்கு நினைவில் இல்லை. நான் வழங்கியதாக சொல்லப்படும் அ.சா.ஆ-8 முதல் 13 வரை ஆன சாதி சான்றிதழ்களில் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் கோபுர முத்திரை இல்லை என்று சொன்னால் ஆமாம். தாங்கள் முறையாக எந்தவிதமான விசாரணையும் செய்யமல் தங்களால் சமூகம் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாதி சான்றிதழ்கள் காவல் துறையால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.10 16:26:07 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.